RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijmrd2514

INDIAN JOURNAL OF MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

# Records of Famines in Tamil Society and their impact

**K. Varusakkani** [a,*], **T. Dharmaraj** [a]

[a] Department of Folklore and Culture Studies, Madurai Kamaraj University, Madurai-625021, Tamil Nadu, India.

*Corresponding author Email: kvkani2016@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd2514

Received: 21-12-2024; Revised: 05-03-2024; Accepted: 12-03-2025; Published: 19-03-2025

Check for updates

**Abstract:** Records of famine and drought in Tamil society are found in literature and oral tradition from the Sangam age itself. They used the traditional astronomical knowledge of the Tamils to predict droughts and accordingly started facing droughts. Paalaithinai, one of the five thinais, is a deviation from Kurinji and Mullai due to drought. Thus, the impact of famine and drought on the Tamil society has been there for a long time. In the modern era, with the advancement of weather forecasting technologies, natural droughts and famines caused by climate change are now caused by artificial famines due to the wrong economic activities of the government and the war environment. In this context, this article discusses the famines in Tamil Nadu, the effects of the famine, how the Tamil people dealt with it and the records of famine found in Sangam literature and modern literature.

**Keywords:** Drought, Famine, Sangam Literature, Climate Change, The Great Famine 1878

**Language:** Tamil

# தமிழ்ச்சமூகத்தில் பஞ்சங்கள் பற்றிய பதிவுகளும் அவற்றின் தாக்கமும்

**கே. வருசக்கனி** [அ, *], **டி.தருமராஜ்** [அ]

[அ] நாட்டுப்புறவியல் மற்றும் பண்பாட்டு ஆய்வுகள் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா

## முன்னுரை

தமிழ் சங்க இலக்கியங்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான தொன்மை வாய்ந்தவையாகும். இலக்கியங்களை காலத்தை காட்டும் கண்ணாடி என அழைப்பர். சமூகத்தில் நிலவிய கருத்துகள், நிகழ்வுகள் ஆகியவை இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும். அவற்றின் வழியாக கடந்த காலத்தில் நிகழ்ந்தவை குறித்து அறிந்து கொள்ளலாம். தமிழ்ச் சமூகம் எதிர்கொண்ட பல்வேறு சிக்கல்களை தமிழ் இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம். இன்றைக்கு பஞ்சம் என்பது உலகிற்கு மாபெரும் அச்சுறுத்தலாக அமைகின்றது. பஞ்சம் ஒரு உலகளாவிய சிக்கலாக உருவெடுத்துள்ள இன்றைய சூழலில் தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்ட பஞ்சங்கள் குறித்தும் மக்கள் அவற்றை எதிர்கொண்ட விதம் குறித்தும் பஞ்சகாலத்தில் இயற்றப்பட்ட நூல்கள் குறித்தும் இக்கட்டுரையில் விவாதிக்கப்படுகின்றது.

## பஞ்சங்களும் வறட்சியும்

பஞ்சம் என்பது ஒரு தேசத்திலோ அல்லது ஒரு பகுதியிலோ கடுமையான உணவு தட்டுப்பாடு ஏற்படுவதாகும். இதனால் மக்கள் தொகையில் ஒரு குறிப்பிடத்தக்க சதவீதம் பாதிக்கப்பட்டு, கடுமையான ஊட்டக்குறைவு மற்றும் பட்டினி சாவுகள் அதிகரிக்கின்றது. உள்நாட்டு கலவரங்கள் மற்றும் கட்டாய இடப்பெயர்வுகள், நீடித்த வறுமை மற்றும் உணவு பாதுகாப்பின்மை, வெள்ளம், வறட்சி, புயல் போன்ற இயற்கை பேரிடர்கள், காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள், பயிர்

விளைச்சல் பாதிப்பு, வறுமை, பொருளாதார சரிவு, அரசின் தவறான கொள்கைகள் போன்றவை பஞ்சத்திற்கான காரணங்களாக சுட்டப்படுகின்றன. வறட்சி என்பது மனிதர்களால் தடுக்க இயலாததாகும். ஏனெனில் அது காலநிலை சார்ந்தது. ஆனால் பஞ்சங்கள் என்பவை இயற்கை பேரிடர் அல்ல. பஞ்சங்கள் வருவதை முன்கூட்டியே கணிக்க முடியும், தவிர்க்க முடியும், இவை மனிதர்களால் உருவாக்கப்படுபவை என்பதை புரிந்து கொள்வது அவசியம். ஐக்கிய நாடுகள் ஐந்து கட்டங்களை கொண்ட உணவு பாதுகாப்பு நிலை வகைப்பாடு (IPC) அளவுகோலைப் பயன்படுத்தி பஞ்சத்தை மிக மோசமான உணவு நெருக்கடியாக வகைப்படுத்துகிறது.

வறட்சி குறித்து பல்வேறு வரையறைகள் அறிஞர்களால் விளக்கப்பட்டுள்ளன. வறட்சியை குறித்து பல்வேறு விளக்கங்கள் பல்வேறு தளங்களில் வெவ்வேறு வழிகளில் வரையறுக்கப்படுகின்றன. உலக வானிலை அமைப்பானது (WMO, 1986) "நீண்ட காலத்திற்கு வழக்கத்திற்கு மாறாக குறைந்த அளவு மழைப்பொழிவு ஏற்படுவதை வறட்சி" எனக் குறிப்பிடுகிறது

வறட்சி என்பது சாதாரண இயற்கை நிகழ்வு மட்டுமல்ல. அது சமூகத்தின் அமைப்பையும், அதன் பாரம்பரியங்களையும், நம்பிக்கைகளையும் பாதிக்கும் ஒரு கலாச்சார அதிர்வாகும். வறட்சியால் ஏற்படும் நீர் பற்றாக்குறை மற்றும் அதன் விளைவுகள் மக்களின் வாழ்க்கை முறையை மாற்றியமைக்கின்றன. இந்த மாற்றங்கள் விழாக்கள், சமூக நடைமுறைகள், பண்பாட்டுக்கூறுகள், கலைகள் என அனைத்திலும் பிரதிபலிக்கின்றன. உதாரணமாக, வறட்சியானது விவசாயம் சார்ந்த சமூகங்களில் அறுவடை விழாக்களின் முக்கியத்துவத்தை குறைக்கின்றது. மழை வேண்டி நடத்தப்படும் சடங்குகள் உருவாக்குகின்றது. சில சமூகங்கள் இயற்கை சக்திகளின் கோபத்திற்கு தாம் ஆளாகிவிட்டதாக நம்புகின்றன. இது சடங்குகள் அதிகரிக்க வழிவகுக்கின்றன. வேறு சில சமூகங்கள் தங்கள் பாரம்பரிய அறிவைப் பயன்படுத்தி வறட்சியுடன் தகவமைத்துக்கொள்ள முயற்சிக்கின்றன.

2000-ம் ஆண்டுகளின் தொடக்கத்தில் பஞ்சம் பற்றிய ஆய்வுகள் பரவலாக அதிகரித்தன. பசியை தடுப்பது, குறைப்பது, அதை சமாளிப்பது ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டது. இதற்கு முக்கிய காரணமாக, பாரம்பரிய பஞ்சங்களிலிருந்து வேறுபட்ட தன்மை கொண்ட புதிய பஞ்சங்கள் தொடர்ந்து ஏற்பட்டதே ஆகும். அமர்த்தியா சென், உணவு கிடைப்பதில் உள்ள பிரச்சனையை கவனம் செலுத்தி, உரிமை பிரச்சனைகளை முன்னிலைப்படுத்தினார். ஆலெக்ஸ் டி வால் பசியின் சமூக-அரசியல் அம்சங்களை வலியுறுத்தி, பரவலான பட்டினி சாவுகளுக்கும் பஞ்சத்திற்கும் இடையிலான தொடர்பை கேள்விக்குள்ளாக்கினார் (Devereux, S. 2006).

## சங்க இலக்கியங்களில் பஞ்சங்கள்

தமிழ் இலக்கியங்களில் வறட்சி குறித்த பதிவுகள் பல இடங்களில் காணப்படுகின்றன. பாண்டிய மன்னன் ஒருவனின் ஆட்சியில் பன்னிரெண்டு ஆண்டுகள் தொடர்ந்து மழையின்றி பஞ்சம் ஏற்பட்டுள்ளது. இப்படி தொடரும் பஞ்சம் 'வற்கடம்' என குறிப்பிடப்படுகின்றது. அப்போது பாண்டிய மன்னன் புலவர்களை வேறு நாடுகளுக்குச் சென்று பஞ்சம் பிழைக்க அனுப்பி வைத்தான். அவர்கள் பன்னிரெண்டு ஆண்டுகள் கழித்து மீண்டும் நாடு திரும்பும் போது பொருளதிகாரத்திற்குரிய நூல் மட்டும் இயற்றப்படவில்லை. இதனால், பாண்டியன் இறைவனிடம் முறையிட, மறுநாள் சொக்கலிங்கத்தின் பீடத்தில் 'இறையனார் களவியல்' இருந்ததாக களவியல் உரை எழுதிய நக்கீரர் கூறுகின்றார். இறையனார் களவியல் உரையில் "அக்காலத்துப் பாண்டிய நாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது" என்று கூறப்படுவதைக் காணலாம் (Sethuraman, 2017).

தமிழர்களைப் பொறுத்தவரை வெள்ளி கிரகத்துக்கும் மழைக்கும் அதிக தொடர்புள்ளதாக கருதப்படுகின்றது. வெள்ளி எனப்படும் சுக்கிரன் தென் திசையில் பயணித்தால் வறட்சி ஏற்படும் எனவும் பின்வரும் சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன (Avvai Duraiswami Pillai, 1999; Puliyur Kesigan, 2010).

*வெள்ளி தென்புலத்து உறைய, விளைவயல்*

*பள்ளம், வாடிய பயன்இல் காலை,*

*இரும்பறைக் கிணைமகன் சென்றவன், பெரும்பெயர்*
*சிறுகுடி கிழான் பண்ணன்* (புறநானூறு, பா.388)
*வயங்கு கதிர் விரிந்து வானகம் சுடர்வர*
*வறிது வடக்கு இறைஞ்சிய சீர்சால் வெள்ளி*
*பயங்கெழு பொழுதோடு ஆநியம் நிற்பக்* (பதிற்றுப்பத்து, பா.24)

*இம் மண் கெழு ஞாலம்*
*நிலம் பயம் பொழிய, சுடர் சினம் தணிய,*
*பயம் கெழு வெள்ளி ஆநியம் நிற்ப,*
*விசும்பு மெய் அகல, பெயல் புரவு எதிர,*
*நால் வேறு நனந்தலை ஓராங்கு நந்த,*
*இலங்கு கதிர்த் திகிரி நின் முந்திசினோரே* (பதிற்றுப்பத்து, பா.69)

*அலங்குகதிர்க் கனலி நால்வயின் தோன்றினும்,*
*இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும்,*
*அந்தண் காவிரி வந்து கவர்பு ஊட்டத்,*
*தோடு கொள் வேலின் தோற்றம் போல,*
*ஆடுகண் கரும்பின் வெண்பூ நுடங்கும்* (புறநானூறு, பா.35)

*எறிதிரைப் பெருங்கடல் இறுதிக்கண் செலினும்,*
*தெறுகதிர்க் கனலி தென்திசைத் தோன்றினும்,*
*என்னென்று அஞ்சலம் யாமே; வென்வெல்*
*அருஞ்சமம் கடக்கும் ஆற்றல், அவன்*
*திருந்துகழல் நோன்தாள் தண்நிழ லேமே!* (புறநானூறு, பா.397)

## தமிழகத்தில் தோன்றிய பஞ்சங்கள்

மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக நிலம் மற்றும் மழையை நம்பியிருந்ததால், அதிகப்படியான மழை மற்றும் மழை பற்றாக்குறை ஆகியவை மக்களின் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகித்தது. முழு நிலமும் ஆட்சியாளரின் வசம் இருந்ததால் மன்னரின் அனைத்து செலவுகளும் மக்களின் வரிகளின் செலவில் இருந்தன. எனவே மாகாண ஆளுநர்கள் மூலம் மக்கள் ஆட்சியாளர்களுக்கு அதிக வரி செலுத்த வேண்டியிருந்தது.

கிபி.1570-இல் திருநெல்வேலிக் கடற்கரைப் பிரதேசத்தில் ஒரு பஞ்சம் தோன்றியது. இதனைப் பற்றிய செய்திகளை போர்ச்சுக்கீசிய மிஷன் பதிவேடுகளில் காணலாம். இம் மிஷனைச் சார்ந்த அருட்தந்தை ஹென்ரிக்ஃஸ் (Father Henriques) அகதி விடுதிகளை அமைத்து தினமும் ஐம்பது பேருக்கு உணவளித்தார் (Srinivasan, 1985).

கி. பி. 1648-இல் கோவையில் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாக பலர் இறந்தனர். ஊரை விட்டு வேற்றிடங்களுக்குச் சென்றுள்ளனர். கி. பி. 1659- இல் கோல்கொண்டா முகமதியர்கள் தென்னாட்டின் மீது போர் தொடுத்தனர். அந்த சமயத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட பஞ்சத்திற்கு

அவர்களும் பலியானார்கள். 17-18 ஆம் நூற்றாண்டுகளில் கடுமையான பஞ்சம் ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் ஏற்பட்டுள்ளன (Srinivasaraghaviyangar, 1893).

1648ல் கோவையில் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாகவும். 1659ல் திருச்சி, தஞ்சையில் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாகவும், 1709 முதல் பதினான்கு ஆண்டுகள் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாகவும் மக்கள் துன்புற்றனர். இச்சமயம் தஞ்சையின் அரசனாக முதலாம் சரபோஜி ஆட்சி செய்தார். 1579 திருநெல்வேலிப் பஞ்சம், 1648-ல் கோவைப் பஞ்சம், 17-ம் நூற்றாண்டில் புதுக்கோட்டை, தஞ்சாவூர்ப் பஞ்சங்கள் எனத் தமிழக நிலப்பரப்பெங்கும் பஞ்சங்கள் நிகழ்ந்த வண்ணம் இருந்தன. 1646ம் ஆண்டிலிருந்து சென்னையின் சாந்தோமும், கோட்டைப்பகுதியும் அடிமை வர்த்தகத்தின் முக்கியக் கேந்திரமாக இருந்தன. 1646 ஆம் ஆண்டுப் பஞ்சம்தான் இந்த அடிமை வர்த்தகம் சென்னையில் செழித்து வளர்வதற்கான மூல காரணமாகும். சென்னை நகரமாகிய பிறகு அதைத் தாக்கிய முதல் பஞ்சம் இதுதான். இந்தப் பஞ்சம் சென்னையை மட்டுமன்றி, இதர மாவட்டங்களையும் தாக்கியது, பசியின் கோரப்பிடியிலிருந்து தப்ப தமிழக மக்களில் பலர் தங்களை அடிமைகளாக விற்று கொண்டனர். இன்று செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அமைந்துள்ள இடத்திலுள்ள சௌலட்ரி கேட் பகுதியில் அடிமைகள் பதிவு செய்யப்பட்டனர். அடிமை வர்த்தகர்கள் அவர்களைக் கப்பலில் ஏற்றி போர்ச்சுகீஸிய, டச்சு காலனிகளுக்கு அனுப்பினர்.

கிபி.1646 இல் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது, குறிப்பாக தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் பல இடங்கள் மோசமாக பாதிக்கப்பட்டன. மீண்டும் 1709இல் தமிழ்நாட்டில் பேரழிவுகரமான பஞ்சம் ஏற்பட்டது. பல இடங்களில் சாப்பிட அரிசியும் குடிக்க தண்ணீரும் இல்லை. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை ஒரு சில நாணயங்களுக்கு விற்றனர். தெருக்களிலும் திறந்தவெளிகளிலும் பலர் பட்டினியால் இறந்தனர். 1677 நவம்பர் மாதத்தில் தமிழ்நாட்டில் மூன்று நாட்களுக்கு பலத்த மழை பெய்தது. காவிரியில் வெள்ளம் ஏற்பட்டதால் தஞ்சாவூர் இராஜ்ஜியம் மிகவும் பாதிக்கப்பட்டது. திருவாரூர் மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் 10,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். பலர் தங்கள் வீடுகளையும் உடைமைகளையும் இழந்தனர் (Samy, 2011).

## தாது வருடப் பஞ்சம்

1850 மற்றும் 1899 க்கு இடையில், இந்தியா 24 பெரிய பஞ்சங்களை சந்தித்தது, இதன் விளைவாக மில்லியன் கணக்கான இறப்புகள் ஏற்பட்டனது.1876-1878 காலகட்டத்தில் ஏற்பட்ட பஞ்சம், தென்னிந்தியாவின் பெரும் பஞ்சம் அல்லது மெட்ராஸ் பஞ்சம், தாது வருடப் பஞ்சம் என்றும் அழைக்கப்படுகிறது (Lardinois, 2009). இது 1876-78 ஆம் ஆண்டில் பருவமழை பற்றாக்குறையின் விளைவாக ஏற்பட்டது. 1876 ஆம் ஆண்டில் தொடங்கிய பஞ்சம் தெற்கு மற்றும் தென்மேற்கு இந்தியாவை இரண்டு ஆண்டுகளுக்கு பாதித்தது. இரு ஆண்டுகளில் ஐம்பது லட்சம் முதல் ஒரு கோடி மக்கள் பட்டினியாலும் நோயாலும் மாண்டனர். இப்பஞ்சத்தின் விளைவாக பிரிட்டிஷ் அரசு பஞ்சக் குழுமத்தைத் தோற்றுவித்து பஞ்ச விதிகளை (*Famine Code*) வகுத்தது. பஞ்சம் என்பது "குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான இறப்புகளுடன் உணவு பற்றாக்குறை" என்று வரையறுக்கப்படுகிறது (Dyson, 1991). மில்லியன் கணக்கான மக்களின் பட்டினிக்கு வழிவகுத்த பஞ்சங்களின் நீண்ட வரலாறு இந்தியாவுக்கு உள்ளது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் போது (1765-1947) 12 பெரிய பஞ்சங்கள் ஏற்பட்டன (1769-1770,1783-1784,1791-1792,1837-1838,1860-1861,1865-1867,1868-1870,1873-1874,1876-1878,1896-1897,1899-1900, மற்றும் 1943-1944). இந்த பஞ்சங்களில் பல கோடைகால பருவமழையின் தோல்வியால் ஏற்பட்டவை, இது பரவலான வறட்சி மற்றும் பயிர் தோல்விக்கு வழிவகுத்தது. 1947இல் இந்தியா சுதந்திரம் பெற்றதிலிருந்து பெரிய பஞ்சங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றாலும், 20ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியிலும் 21ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஏற்பட்ட பெரிய அளவிலான வறட்சி தொடர்ந்து இந்தியாவில் பேரழிவு தரக்கூடிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது (Gadgil, 2006). எனவே, இந்தியாவில் பஞ்சம் மற்றும் வறட்சி பற்றிய புரிதலானது விவசாய உற்பத்தித்திறன் மற்றும் மேலாண்மை ஆகியவற்றுடன் தொடர்புடையதாகும்.

1876 ஆம் ஆண்டு பருவநிலை மாற்றத்தால் தக்காணப்பீடபூமி முழுவதும் பருவமழை பொய்த்தது. உணவுதானியங்களின் விளைச்சல் பெருமளவு குறைந்தது. உணவு தானிய உற்பத்தி குறைந்தாலும், ஆங்கிலேயர்கள் ஏற்றுமதியை குறைக்கவில்லை. உணவுப்பொருள் பதுக்கல் பரவலாகி, உணவு தானியங்களின் விலை கட்டுக்கடங்காமல் போனதால், விவசாயிகள் அடுத்த வருடத்திற்கான விதை நெல்லை உண்ணும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதனால் அடுத்த வருடம் பயிரிடப்பட்ட நில அளவு வெகுவாகக் குறைந்து, உணவுப் பற்றாக்குறை தீவிரமடைந்தது. தமிழகத்தின் நெற்களஞ்சியமெனக் கருதப்படும் தஞ்சாவூர் மாவட்டத்தில் கூட பட்டினிச் சாவுகள் மிகுந்தன என்று பஞ்ச நிவாரண குழு உறுப்பினர் வில்லியம் டிக்பி தனது *The Famine Campaign in Southern India* என்ற நூலில் தெரிவித்துள்ளார் (Digby, 1878).

வறட்சி ஏற்பட்டபோது மக்கள் விதை நெல்லைச் சமைத்துச் சாப்பிடும் நிலை ஏற்பட்டது. விவசாயம் செய்ய முடியாமல் விவசாயிகள் தத்தளித்தனர். விவசாயம் பொய்த்துப் போக, உள்ளூர் சந்தைகளில் தானியங்களின் வரத்து முற்றிலுமாக நின்று போனது. பெருமுதலாளிகள் ஆங்கிலேயரின் உதவியுடன் வடமாகாணங்களில் இருந்து தொடர் வண்டிகளிலும், பர்மாவிலிருந்து கப்பல்களிலும் தானியங்களைக் கொண்டு வந்து இறக்கினர். ஆனால் அவற்றைப் பதுக்கி கள்ளச்சந்தையில் மூன்று, நான்கு மடங்கு விலையில் விற்றுக் கொள்ளை அடித்தனர் (Srinivasan, 1985).

பஞ்சகாலத்தில் மக்கள் வேலை வாய்ப்பினை முழுதாக இழந்தனர். வருமானமற்ற நிலையில் நகைகள், பாத்திரங்கள், ஆடுகள், மாடுகள், துணிகள், வீட்டு கதவுகள், ஜன்னல்கள் என்று அனைத்தையும் விற்று உணவு உண்டனர். பணம் கரைந்ததும் நாடோடி வாழ்க்கை வாழும் நிலைக்குப் பெரும்பாலான மக்கள் தள்ளப்பட்டனர். வேலை பெறுவதற்காக மக்கள் கிராமங்களைக் காலி செய்து நடைபயணமாக பெரு நகரங்களை நோக்கிச் சென்றனர். கொடிய வெப்பத்தில் உணவும் நீரும் இன்றி நெடு நாட்கள் நடந்ததால் வயதானவர்களும், குழந்தைகளும் பாதி வழியிலேயே ஆங்காங்கே விழுந்து இறந்தனர் (Srinivasan, 1985).

ஊர்வன, பறப்பன என அனைத்தையும் மக்கள் உண்ணத் துவங்கினர். வயிற்றைப் புண்ணாக்கி எரிச்சல் ஏற்படுத்தும் காட்டுக் கிழங்குகளைக் கூட விட்டு வைக்கவில்லை. பழக்கமில்லாத உணவினாலும், சில நச்சுள்ள காய், கொட்டை, கிழங்குகளை உண்டதாலும் பலர் நோயுற்று இறந்தனர். பசியால் மக்கள் எலும்பும் தோலுமாகி செத்து மடிந்தனர். இந்தப் பஞ்சம் பற்றி ஆய்வு மேற்கொண்ட ஆய்வாளர் டேவிட் ஆர்னால்ட் கொடுக்கும் தகவல் படி 35 லட்சம் பேர் இறந்ததாக பதிவு செய்துள்ளார்.

நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த இந்திய கவர்னர் ஜெனரல் லார்ட் லைட்டன் பிறப்பித்த உத்தரவின் பேரில் ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் பஞ்ச நிவாரண நடவடிக்கைகள் உருவாக்கப்பட்டன. ஆங்காங்கே வேலைத் திட்டங்களைச் செயல்படுத்த முன்வந்தனர். பல இடங்களில் தண்டவாளம் அமைக்கும் பணிகளையும் சாலைகள் அமைக்கும் பணிகளையும் ஏற்படுத்தி மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்க முயன்றனர். வேலை செய்தவர்களுக்குக் கூலியாக ஒரு வேளை உணவு வழங்கப்பட்டது. கடற்கரையில் ஏற்றுமதி ஆகும் தானியங்கள் கீழே கொட்டினால் அதை சேகரித்துத் தின்ன பலர் போட்டி போட்டனர்.

பஞ்சம் தீவிரமடைந்தபின், நிவாரணப் பணிகள் மெல்லத் தொடங்கின. ஆனால் நிவாரணம் பெறுவோர் கடுமையான விதிகளுக்குட்படுத்தப்பட்டனர். முதியோர், உடல் ஊனமுற்றோர், குழந்தைகளுக்கு மட்டும் இலவச உணவு வழங்கப்பட்டது. ஏனையோருக்குக் கடுமையான உடலுழைப்புக்குப் பதிலாகவே நிவாரணமளிக்கப்பட்டது நிவாரணக் கூலி பெற்றவர்களைக் கொண்டு பல கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சென்னை நகரின் அருகில் உள்ள பக்கிங்காம் கால்வாய் இவ்வாறு கட்டப்பட்டதாகும்.

சென்னையில் சுகாதாரத் துறை ஆணையராக இருந்த டபிள்யூ. ஆர். கார்நிஷ் என்ற மருத்துவரின் பெருமுயற்சியால் மார்ச் 1877 இல் அரசாங்கம், தின நிவாரண அளவை உயர்த்த ஒப்புக் கொண்டது (Arnold, 1994). இதைத் தொடர்ந்து நாள்தோறும் 570 கிராம் தானியமும் 53 கிராம் பயறுவகைகளும் புரதச் சத்துக்காக வழங்கப்பட்டன வில்லியம் டிக்பியின் அறிக்கைப்படி தாது

வருட பஞ்சத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 1.03 கோடி என பதிவு செய்யப்பட்டுள்ளது (Digby, 1901).

இந்தப் பஞ்சத்தில் மடிந்தவர்களின் எண்ணிக்கை பற்றி உறுதியான புள்ளிவிவரங்கள் கிடைக்கவில்லை. ஆயினும், இறந்தவர்கள் தொகை பற்றி, 'பிரிட்டிஷ் நிர்வாகத்தின் கீழ் சென்னையின் வளர்ச்சி' என்ற நூலை 1890ல் எழுதிய ஸ்ரீநிவாச ராகவய்யங்கார் தரும் தகவல்படி சுமார் 40 லட்சம் பேர் பட்டினிச் சாவுக்கு இரையாகி இருக்கக் கூடும் என்று அவர் தெரிவிக்கிறார். இந்தப் பஞ்சம் பற்றி ஆய்வு மேற்கொண்ட ஆய்வாளர் டேவிட் ஆர்னால்ட் என்பவர் கொடுக்கும் தகவலும் ஸ்ரீநிவாச ராகவய்யங்காரின் கணக்கைக் கிட்டத் தட்ட உறுதி செய்கிறது.

தானியப் பஞ்சம் ஏற்பட்டதும் பீதியின் பிடியில் சிக்கிய மக்களிடையே அவர்களின் பயத்தை அதிகரிக்கச் செய்யும் வதந்திகள் காட்டுத் தீ போலப் பரவின. இதன் விளைவாக தானியக் கொள்ளைகளும், கலவரங்களும் நிகழ்ந்தன. கலவரங்களுக்கு வதந்திகள் மட்டுமே காரணமல்ல. வியாபாரிகள் தானியங்களைப் பதுக்கியதும், விலையைச் சுமார் பத்து மடங்கு அதிகரித்ததும் காரணங்களாக அமைந்தது. மனம் கொதித்த மக்கள், அரசு வியாபாரிகளின் கொள்ளை லாப நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்குமென எதிர்பார்த்து ஏமாந்தனர். அரசு வழக்கம்போல வியாபாரிகளின் கொள்ளையைக் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டது. நிலைமை கட்டுக்கடங்காமல் போன போது மட்டுமே அரசு தலையிட்டது. உணவுப்பற்றாக்குறையால் நிவாரண முகாம்களில் இருக்கும் பெரும்பாலான பெண்களும் குழந்தைகளும் உடல் மெலிந்து மோசமான நிலையில் இருந்தனர். நூற்றுக்கணக்கான மக்கள் பசியினால் வரும் பஞ்ச வயிற்றுப்போக்கு எனும் நோய் பரவியது. மேலும் காலரா கொள்ளைநோய் போல பரவியது. சாலையின் இருபுறங்களிலும் காலராவால் பாதிக்கப்பட்ட மக்கள் இறந்து கிடந்தனர். பஞ்ச நிவாரண முகாம்களில் வேலை செய்யும் மக்களுக்கு வழங்கப்பட்ட உணவானது சிறையில் இருக்கும் கைதிகளுக்கு வழங்கப்பட்ட உணவை விட குறைவானதாக இருந்தது. பசியாலும், தாகத்தாலும் இறந்த கால்நடைகளை மக்கள் உண்டனர். கால்நடைச் சந்தைகள் உடல் வற்றித் தோல்பைகள் போல இருந்த மாடுகளால் நிரம்பியிருந்தன.

## வெளிநாட்டு இடம்பெயர்வுகள்

பஞ்சத்தின் கடுமையிலிருந்து தப்பிக்க தென்னிந்தியர் பலர் மொரீஷியஸ், மலேயா, பிஜி, இலங்கை, பர்மா, தென்னாப்பிரிக்கா போன்ற பிரிட்டனின் பிற காலனிகளுக்கு ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் புலம் பெயர்ந்தனர். தாது வருட பஞ்சத்தின் போது மதுரை, தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி மாவட்டங்களிலிருந்து சிலோனிற்கு தோட்ட வேலைகளுக்கு செல்ல பாம்பன் துறைமுகத்திலிருந்து சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன (Digby, 1878). தூத்துக்குடியில் இருந்தும் பெரிய எண்ணிக்கையில் மக்கள் கப்பல்களில் சென்றனர்.

கடுமையான பஞ்சங்களிலிருந்து மீள்வதற்காக தமிழ்நாட்டிலிருந்து தமிழர்கள் ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டிலிருந்த ஏறத்தாழ நாற்பது நாடுகளுக்கு (1820-இல் மலேசியா - பினாங்கு, 1824-இல் இலங்கை, 1840-களில் மொரிஷியஸ், 1860களில் தென்னாப்பிரிக்கா - நேடால், 1870-களில் டச்சுக்காலனியான சுரிநாமில், 1879-இல் பிஜித்தீவு) கொத்தடிமைகளாகச் சென்றனர். தேயிலைத் தோட்டப்பணிகளுக்காகவும் (இலங்கை மலையகம் - கண்டி), இரப்பர் தோட்டப்பணிகளுக்காகவும் (மலேசியா - கடாரம்), கரும்புத் தோட்டப்பணிகளுக்காகவும் (பிஜித்தீவு), சுரங்கப்பணிகளுக்காகவும் (தென்னாப்பிரிக்கா) நிரந்தரமாக அங்கேயே கட்டாயக் குடியமர்த்தப்பட்டனர். இப்பஞ்சம் தாக்கிய (1876-77) வருடங்களில் சென்னை மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து இலங்கைக்குச் சென்றவர்களின் எண்ணிக்கை 3.30 லட்சத்துக்கும் அதிகமாகும். பஞ்சம் பிழைக்க இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா எனப் பல நாடுகளுக்குக் கூட்டம் கூட்டமாகக் கப்பல்களில் மதுரைக்காரர்கள் சென்றார்கள். தனுஷ்கோடி, தொண்டி, தூத்துக்குடி, நாகப்பட்டினம் எனப் பல துறைமுகங்களில் இருந்து சிறிய படகுகள் முதல் கப்பல்கள் வரை மக்களை அள்ளிக் கொண்டு கிளம்பியது. கப்பல் இயக்கத்தினால் ஏற்படும் குமட்டல் நோய்க்கு பலர் பலியானார்கள். இடையே காலராவும் ஏற்பட்டு மக்கள் கப்பலிலேயே இறந்தார்கள் (Digby,1878). அவ்வாறு இறந்தவர்களின் உடல்கள் கடலில் வீசப்பட்டன.

## பஞ்ச கால நூல்கள்

### 1877 - தாதுவருட பஞ்சம்

1877 தாது வருடத்தில் மெட்ராஸ் மாகாணத்தில் ஏற்பட்ட பஞ்சம் குறித்த இந்திய அரசு - மெட்ராஸ் மாகாண அரசு - பஞ்ச நிவாரண ஆணையர் ஆகியோர் வெளியிட்ட அறிக்கைகள் ஆவணங்கள் ஆகியவற்றை ஆதாரமாக கொண்டு வில்லியம் டிக்பி எனும் ஆங்கிலேயரால் எழுதப்பட்டது. 1878 ஜுலை மாதம் இந்த நூலை எழுத தொடங்கினார். 1877 அக்டோபரில் வடகிழக்கு பருவ மழை பொய்த்ததையடுத்து உணவுப்பயிர்கள் அழிந்தன. எனவே உணவுப் பொருட்களின் தேவை அதிகமாகியது. சந்தையில் வணிகர்கள் எதிர்காலத்தில் கிடைக்கப்போகும் லாபத்தை எண்ணி பொருட்களை பதுக்கினர். இதன் விளைவாக உணவுப்பொருட்கள் அதிக விலையேற்றமும் பற்றாக்குறையும் ஏற்பட்டது. மறுபுறம் மெட்ராஸ் மாகாண அரசுக்கு வியாபாரத்தில் தலையிடக்கூடாது எனவும் உணவுப்பொருட்களை கொள்முதல் செய்யவும் மத்திய அரசு தடை விதித்த்து. இதனால் மெட்ராஸ் மாகாண அரசு உணவுப்பற்றாக்குறை விஷயத்தில் தலையிடமுடியவில்லை. தொடர்ச்சியான விலையேற்றமும் பஞ்சமும் உணவுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்திய போது மாகாண அரசு தலையீடு செய்ய தொடங்கியது. ஏனெனில் பஞ்ச நிவாரண வேலைகளில் ஈடுபடும் பொதுமக்களுக்கு மாகாண அரசு கொடுத்த கூலியை கொண்டு பொதுமக்களால் சந்தையில் உணவுப்பொருட்கள் வாங்கமுடியாதவாறு விலையேற்றம் இருந்தது. பஞ்சம் நீடிக்கும் என எண்ணி வியாபாரிகள் விற்பனையை முழுமையாக தொடங்கவில்லை. எணவே இதை கட்டுப்படுத்த அரசாணை எண்:1843, நவம்பர் 29, 1876ன் படி மாகாண அரசே பஞ்ச நிவாரண கூலியாக உணவுத்தானியங்களை வழங்கியது. எங்கெல்லாம் பஞ்சம் இருக்கிறதோ அங்கெல்லாம் நிவாரண பணிகள் தொடங்கப்பட்டு வயதானவர்களுக்கும் குழந்தைகளுக்கும் உணவு வழங்கப்பட்டது. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மேக்குஹே தனது குறிப்புகளில் "எறும்பு புற்றுகளில் இருந்து ஆறு முதல் எட்டு மணி நேரம் அலைந்து சேகரிக்கப்பட்ட ஒரு கையளவு தானியத்துடன் திரும்பிய பத்து பெண்களை" கண்டதாக பதிவு செய்கின்றார் (Digby, 1878, P.27). ராமநாதபுர மாவட்ட ஆட்சியர் டர்னர் மதராஸ் மாகாண அரசுக்கு எழுதிய குறிப்புகளில் பெருநாழி, பரலச்சி பகுதிகளில் வறட்சியினால் உணவு கிடைக்காமல் மக்கள் கூம்புக் கிழங்கு எனும் ஒருவகையான கிழங்கு வகையை உண்கின்றனர். இதிலிருக்கும் விஷத்தை முறிக்க மூன்று நாட்கள் கொதிக்க வைத்து அதிலிருந்து கஞ்சி செய்து குடிக்கின்றனர்.

பெரும்பான்மையான மக்கள் அரசாங்கத்தின் பஞ்ச நிவாரண பணிகளை தங்கள் தினசரி உணவிற்கு நம்ப வேண்டிய நிலைக்கு வந்து விட்டார்கள். ஆனால் அவர்கள் சம்பாதிக்கும் பணத்தை கொண்டு உணவு வாங்க முடியாத நிலை வந்து விட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் உணவு தர வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. சம்பளம் எவ்வளவு கொடுத்தாலும் போதுமான உணவை வாங்க முடியாத நிலை இருந்தது. தானிய வியாபாரிகள் தினமும் விலையை உயர்த்திக்கொண்டே இருந்தனர். எனவே அரசாங்கம் நிவாரணத்தில் ஈடுபட்ட மக்களுக்கு கூலியாக ஆண்களுக்கு ஒன்றரை பவுண்டு தானியங்களும் (680 கிராம்) பெண்களுக்கு ஒரு பவுண்டு (450 கிராம்) தானியங்களும் சிறுவர்களுக்கு முக்கால் பவுண்டு (340 கிராம்) தானியங்களும் கூலியாக வழங்கப்பட்டது (Digby, 1878, P.25). தொடர்ந்து விலையேறிக் கொண்டிருக்கும் தானியங்களை அரசு கொள்முதல் செய்து மக்களுக்கு விநியோகிக்கும் யோசனையை இந்திய அரசுக்கு மெட்ராஸ் மாகாண அரசு தெரிவித்தது. ஆனால் இந்திய அரசின் பஞ்ச நிவாரணத்துறையால் இந்த யோசனை நிராகரிக்கப்பட்டது. அரசாங்கம் நேரடியாக தானிய கொள்முதலில் ஈடுபடுதல் என்பது மிகுந்த செலவை ஏற்படுத்தும் விஷயமாகும். மேலும் இந்த நடவடிக்கை வணிகர்கள் தானிய இறக்குமதி செய்வதை குறைத்து விடும் என இந்திய அரசு தெரிவித்தது.

உணவுப்பொருளை எடுத்து செல்வதற்காக மாகாணத்தின் பல ரயில்பாதைகள் மீட்டர்கேஜ் பாதைகளாக மாற்றப்பட்டன. வேறு மாகாணங்களில் இருந்து ரயில் பெட்டிகள் கடன் வாங்கப்பட்டன. விலையேற்றத்தை சமாளிக்க தொழிலாளர்களுக்கு பஞ்சப்படி வழங்கப்பட்டது. வறட்சி நீங்கி மழை பெய்து முடித்த பின்பு மக்களிடம் பயிரிட விதைகளோ கால்நடைகளோ தீவனமோ இல்லை. நிலங்கள் எல்லாம் அடமானம் வைக்கப்பட்டு வட்டியில் மூழ்கி விற்கப்பட்டு

விட்டதால் உழவு மாடுகள் வாங்க கடன் வாங்கவும் முடியவில்லை. பல இடங்களில் உழவு உபகரணங்கள் இல்லை. உழவு மாடுகள் இறந்து போயிருந்தன. வேறு கால்நடைகளும் கிடைக்கவில்லை. பல மாதங்களாக இருப்பு வைத்திருந்ததால் விதை தானியங்கள் கெட்டுப்போயிருந்தன. பல இடங்களில் நிலம் அதிக ஈரப்பதத்தோடு இருந்ததால் விதைகள் அழுகி போயிருந்தன. எனவே மழை பெய்தாலும் உடனடியாக பயிரிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விதைப்பு இரண்டு மூன்று முறை நடைபெற வேண்டியிருந்தது. இதைத் தாண்டி பயிர்கள் முளையிட்டு வரும்போது வெட்டுக்கிளிகள் கூட்டமாக வந்து பயிர்களை அழித்தன. எனவே செப்டம்பர் மாதம் மீண்டும் அறுவடை நடக்கும்வரை மக்களுக்கு வேலையும் உணவும் அரசு கொடுக்க வேண்டியிருந்தது.

## தாது வருடக் கரிப்புக் கும்மி

தமிழின் சிற்றிலக்கிய வகைகளில் 'கும்மி' என்பது ஒன்றாகும். பக்திக் கும்மி, சண்டைக் கும்மி, கதைக் கும்மி என்று பல உண்டு. இந்தப் பிரிவில் 'கரிப்புக் கும்மி' என்பது அடக்கம். பஞ்சத்தை மக்கள் கருப்பு, கரிப்பு என்ற சொற்களால் அழைக்கின்றனர். தமிழகத்தின் சமூக ஆவணங்களாகத் திகழும் இலக்கியங்களில் கும்மிக்கு முக்கிய இடம் உண்டு. தாது வருஷப் பஞ்சத்தில் ஏற்பட்ட கொடும் விளைவுகளை "தாது வருஷக் கரிப்புக் கும்மி" எடுத்துக் காட்டுகிறது. பஞ்சகாலத்தில் காஞ்சிபுரத்தைச் சுற்றிய பகுதிகள் பாதிக்கப்பட்ட விதங்களையும், மக்கள் பட்ட அல்லல்களையும், அறநெறிகளின் வீழ்ச்சியையும் இந்தக் கும்மி விவரிக்கிறது. இதைப் பருவத சஞ்சீவி என்னும் மலைமருத்தன் என்ற புலவர் 1877இல் எழுதியதாகத் தெரிகிறது.

ஓலைச் சுவடியாக இருந்த இந்த நூலைத் தஞ்சை சரஸ்வதி மஹால் நிலையம் 1985இல் பதிப்பித்துள்ளது. பஞ்சம், அதைத் தொடரும் காலரா சாவுகள், நீண்ட நாள் பட்டினிக்குப் பின் திடீரென உணவு உண்டவர்கள் இறந்த விதங்கள், குடும்பப் பெண்கள் பசியிலிருந்து தப்ப விபச்சாரத்தில் ஈடுபட்டது, கொள்ளைகள் உள்ளிட்ட பல அவலங்கள் இந்த நூலில் சித்திரிக்கப்பட்டுள்ளன. மக்கள் உணவு தேடி அலைந்த துன்பங்களையும், மக்கள் தானியம் கிடைக்காமல் எறும்பு வளைகளைத் தோண்டி அங்கிருந்த தானியத்தை எடுத்துப் பசியாற முற்பட்டதையும் கும்மி பாடல்களின் மூலம் அறிந்துகொள்ளலாம். அக்காலத்தில் விற்ற தானியங்களின் விலை பற்றி நூலில் குறிப்புகள் காணப்படுகின்றன. பஞ்சம் பிழைக்க வந்த மக்கள் பற்றியும் இந்த நூல் விவரங்களை தெரிவிக்கின்றன. சொத்துக்கள் குறைந்த விலையில் விற்கப்படுதல், சென்னை நகரத்திலிருந்து வந்த வணிகர்கள் அங்கு கொள்ளை வர்த்தகத்தில் ஈடுபட காஞ்சியிலிருந்து நெல்லை வண்டி வண்டியாகக் கடத்திச் சென்ற சம்பவங்கள் உள்ளிட்ட, பஞ்சத்தின் விளைவுகளை பற்றி கூறுகின்ற நூல் ஆகும். இயற்கை மாறுபாட்டால் உண்டான தாது வருஷப் பஞ்சம் இந்திய வரலாற்றில் குறிப்பாகச் சமுதாய வரலாற்றில் என்றும் மறக்கவியலாத ஒரு நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது. இப்பஞ்சம் பற்றி ஆ. சிவசுப்பிரமணியன் விவரிப்பது அறியத்தக்கது (Sivasubramanian, 1982).

கிபி 1875இல் அன்றைய சென்னை மாநிலத்தில் தென் மேற்குப் பருவகாற்று வீசாமையால் மழை பெய்யவில்லை. அடுத்து 1876ஆம் ஆண்டில் தென்கிழக்குப் பருவக்காற்றும் வீசாமல் போனதால் கடும் வறட்சி ஏற்படத் தொடங்கியது. 1877இல் வறட்சியின் கடுமை உச்சக் கட்டத்தை அடைந்தது. வறட்சியின் தொடர்ச்சியாகக் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. பஞ்சத்திற்கு முந்தைய ஆண்டுகளில் இலட்சக்கணக்கான டன் உணவுப் பொருளைச் சென்னை மாநில அரசாங்கம் ஏற்றுமதி செய்து வந்தது. இதன் காரணமாகப் பஞ்சத்தில் வாடிய மக்களுக்குத் தேவையான உணவுப் பொருளை வழங்க அரசாங்கத்தால் இயலவில்லை. உணவுப் பொருள்களின் விலை அதி உச்ச நிலையை அடைய, மக்களிடம் வாங்கும் சக்தி குன்றியது. மக்கள் மடியத் தொடங்கினர். இப்பஞ்சத்தில் மாநிலம் முழுவதும் லட்சக்கணக்கான மக்கள் மடிந்ததாக அரசாங்கமே கணக்கிட்டது என்றால் மடிந்தவர்களின் எண்ணிக்கை உண்மையில் இதைவிட அதிகமாகத்தான் இருக்கும். இப்பஞ்சத்தைக் "கஞ்சித் தொட்டிப் பஞ்சம்" எனவும் கூறுவர், பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்குவதற்காக அரசாங்கம் கஞ்சித் தொட்டிகள் பலவற்றை அமைத்து மக்களுக்குக் கஞ்சி வழங்கியதால் இப்பஞ்சம் இப்பெயரால் அழைக்கப்பட்டது எனத் "தமிழ்நாட்டு

வரலாறு" எழுதிய ஆரோக்கியசாமி குறிப்பிடுவதாக ஆ. சிவசுப்பிரமணியன் (1982, ப.47) கூறுகின்றார் (Sivasubramanian, 1982).

*"பஞ்சம் பஞ்சம் என்று நெஞ்சைப் பதைக்குது,*

*பாண்டி நாடெல்லாம் தீஞ்சில்லா போகுது"*

எனும் நாட்டுப்புறப் பாடல் மெ. சுந்தரம் பதிப்பில் காணப்படுகிறது. ஒருதாய் தன் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கவியலாமைக்காக இரங்கும் நிலையை விவரிக்கிறாள். பருத்தி விதையில்லாமையால் பசும் பாலுக்கு வழியில்லை எனவும், மரம், செடி, கொடி அவ்வளவும் மொட்டையாக இருப்பதால் ஆட்டுப் பாலுக்கும் வழியில்லாமல் போயிற்று எனவும் அவள் இரங்கிப் பாடுவதாக ஒரு பாடல் காணப்படுகிறது. இப்பாடல் மா. கோதண்டராமன், மா. வரதராஜன், தமிழண்ணல், ஆறு. அழகப்பன், மெ. சுந்தரம் ஆகியோர் பதிப்பித்த நாட்டுப்புறப் பாடல் தொகுதிகளில் காணப்படுகிறது.

பார்ஸி மாக்வீன் சேகரித்த பஞ்சம் பற்றிய பாடலை கி. வா. ஜகந்நாதன். பதிப்பித்த மலையருவியில் காணலாம். நா. வானமாமலை பதிப்பித்த "தமிழர் நாட்டுப் பாடல்கள்" எனும் தொகுப்பில் மழையில்லாமையால் மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்களும் தாது வருடப் பஞ்சத்தால் மக்கள் அடைந்த துயரமும் எட்டுப் பாடல்களில் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டுக் கதைப்பாடலாகிய "நல்லதங்காள் கதை" பஞ்சத்தின் கடுமையை விளக்கிக் கூறுவதைப் பார்க்கலாம்.

*"மரக்கால் உருண்ட பஞ்சம்*

*மன்னவரைத் தோத்த பஞ்சம்*

*நாழியுருண்ட பஞ்சம்*

*நாயகனைத் தோத்த பஞ்சம்*

*ஆழாக்குருண்ட பஞ்சம்*

*ஆலினைத் தோத்த பஞ்சம்*

*தாலி பறிகொடுத்துத்*

*தனிவழியே நிண்ண பஞ்சம்*

*கூறை பறி கொடுத்துக்*

*கொழுந்தனைத் தோத்த பஞ்சம்*

*கணவனைப் பறிகொடுத்துக்*

*கைக்குழந்தை வித்த பஞ்சம்"* எனப் பஞ்சத்தின் கோர முகம் காட்டப்பட்டுள்ளது.

மலையருவி சென்னை மாவட்ட ஆட்சியராக விளங்கிய பர்சி மாக்வின் ஐ.சி.எஸ்., அவர்கள் தொகுத்த நாட்டுப்புறப் பாடல்களின் தொகுதியைத் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்துக்காகக் கி.வா.ஜகந்நாதன் அவர்கள் 1975 ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளார். கோபல்ல கிராமம், அஞ்ஞாடி ஆகிய நாவல்களிலும் தாது வருட பஞ்சம் குறித்த தகவல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## பஞ்சலட்சணத் திருமுகவிலாசம்

தாது வருடப் பஞ்சம் என்று தமிழ்நாட்டு மக்களால் அழைக்கப்பட்ட இப்பஞ்சத்தைப் பற்றி பல பாடல்கள் இயற்றப்பட்டன. வில்லியப்பப்பிள்ளை *"பஞ்சலட்சணத் திருமுகவிலாசம்"* என்ற நூலை இயற்றினார். பஞ்சலட்சணத் திருமுகவிலாசம் 1899 ஆம் ஆண்டு வெளியான ஒரு தமிழ் நூல். சோதிடர்கள், விலைமாதுக்கள், நகை ஆசாரிகள் ஆகியோரின் போலித்தனத்தையும் பொய் புரட்டையும் இந்த நூல் விரிவாக விளக்குகிறது. மதுரை சுந்தரேசுவரக் கடவுள், பஞ்சத்தால்

பாதிக்கப்பட்டவர்களின் இன்னல்களைத் தன்னால் தீர்க்க இயலாது என்று கைவிரித்து அவர்களை சிவகங்கை ஜமீந்தார் துரைசிங்கத்திடம் முறையிடுமாறு அனுப்புவதாக இந்த நூல் குறிப்பிடுகிறது.

### புயல்காத்துப் பாட்டும் பஞ்சக் கும்மியும்

இந்நூலின் ஆசிரியர்கள் வெங்கம்பூர் சாமிநாதப்புலவர், வெண்ணந்தார் வரகவி அருணாசலம் ஆகியோராவர். இந்நூலை பதிப்பித்தவர் புலவர் செ. இராசு பிஎச்.டி., தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் ஆவர். இந்நூலில் உள்ள பரிதாபி, கர வருஷப் பஞ்சக் கும்மிகளைப் பாடியவர் அருணாசலம் என்பவர். இவர் வரகவி, வரகவிராயர் எனப்புகழப்பட்டவர். இவர் பாடிய இந்நூல் வண்ணக்கும்மி, வண்ணத்தருவு என்று கூறப்பட்டுள்ளது. பரிதாபி வருடத்திலும் (1853) தொடர்ந்து பிரமாதீச, ஆனந்த, ராட்சத, நள, பிங்கள, காளத்தி, சித்தாத்திரி, இரவுத்திரி, துண்மதி, துந்துபி, ருத்ரோத்காரி, ரத்தாட்சி, குரோதன ஆண்டுகளிலும் ஏற்பட்ட கொடிய பஞ்சம் பற்றி இங்கு கூறப்பட்டுள்ளது.

### பஞ்சகால நாட்டுப்புற கதைகள் - நல்ல தங்காள், குஞ்சரத்தம்மாள்

இந்த பஞ்ச காலத்தை ஒட்டி பல கதைகள் தமிழ்நாட்டில் வலம்வந்தன. அவற்றில் மிகப் பிரபலமான கதை, நல்லதங்காள் கதை. பசியின் காரணமாக தனது குழந்தைகளைக் கொன்று, தானும் தற்கொலை செய்து கொண்ட நல்லதங்காள் கதை என்பது தாது வருடப் பஞ்சத்தின் குறியீடு. இன்று நல்லதங்காளை சிறுதெய்வமாக வழிபடுகிறோம். ஆனால், அவள் உயிரிழக்க காரணம் பஞ்சம் என்கிறது வாய்மொழியாக சொல்லப்பட்டு வரும் நல்லதங்காள் கதை. திருவில்லிபுத்தூர் அருகேயுள்ள அர்ச்சுனாபுரத்தில் பிறந்த நல்லதங்காளை சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் ராஜ வம்சத்தைச் சேர்ந்த காசிராஜாவுக்குத் திருமணம் செய்து கொடுத்தனர். இளம் வயதிலேயே ஏழு குழந்தைகளுக்குத் தாய் ஆனாள். அப்போது தொடர்ந்து 12 ஆண்டுகள் பஞ்சம் ஏற்பட, நல்ல நிலையிலிருந்த குடும்பம் வறுமைக்கு வந்தது. பிறகு, தன் குழந்தைகளை கிணற்றில் வீசிவிட்டு தானும் அக்கிணற்றில் விழுந்து இறந்ததாகச் செவிவழிக்கதை கூறப்படுகின்றது (Perumal, 1987).

### குஞ்சரத்தம்மாள் கதை

குஞ்சரத்தம்மாள் ஒரு தேவதாசி. மதுரை வடக்கு ஆவணி மூல வீதியில் அப்போது அவருக்கு சொந்தமாக இரண்டு மாளிகைகள் இருந்திருக்கிறன. தங்கம், வைரம் என எக்கச்சக்க ஆபரணங்கள் அவரிடம் இருந்தன. தாது பஞ்சம் வந்தபோது மக்கள் பசியில் மடிவதைக் கண்ட குஞ்சரத்தம்மாள் தனது மாளிகை வாசலில் ஒரு கஞ்சித் தொட்டியைத் திறந்திருக்கிறார். தன்னிடம் இருந்த தங்கம், வைரம் அனைத்தையும் விற்று எங்கெங்கோ இருந்து அரிசி மற்றும் தானியங்களை வரவழைத்து தன் மாளிகை வாசலில் கஞ்சி காய்ச்சி ஊற்ற ஆரம்பித்தார் குஞ்சரத்தம்மாள். அவரது மாளிகை அடுப்பு அணையாமல் எரிந்தது. குஞ்சரத்தம்மாள் கஞ்சி ஊற்றும் விஷயம் மதுரை முழுக்க பரவவே பலரும் அங்கு வந்து பசியாறினர். இந்த செய்தி அப்போதைய மதுரை மாவட்ட ஆட்சியர் ஜார்ஜ் பிராக்டருக்கு எட்டவே அவர் நெகிழ்ந்து போனார். அரசு வேண்டிய காரியத்தை இந்தப் பெண் செய்கிறாரே என எண்ணி, அரசு சார்பிலும் மூன்று இடங்களில் உடனடியாக கஞ்சித் தொட்டி திறந்திருக்கிறார் ஜார்ஜ் பிராக்டர் என காவல் கோட்டம் நாவலில் எழுத்தாளர் சு. வெங்கடேசன் பதிவு செய்துள்ளார்.

ஆனால், உண்மையில் இப்படி ஒரு பாத்திரம் வரலாற்றில் கிடையாது. இந்த காலகட்டம் பற்றி அரசாங்க ஆவணங்கள் தவிர்த்து மதுரை நகர வரலாற்றைச் சொல்லும் குறிப்பு என்பது மதுரையில் இருந்த அமெரிக்க கிறிஸ்தவ மிஷனின் வருடாந்திர அறிக்கைகள்தான். ஆண்டு தோறும் வெளிவந்த இந்த அறிக்கைகளில் சம்பந்தப்பட்ட ஆண்டுகளின் அறிக்கைகளை எடுத்துப் பார்த்தால், இப்படி ஒரு நிகழ்வு ஏதும் இடம்பெறவில்லை. தாது வருடப் பஞ்சம் குறித்து 1877ல் எழுதப்பட்ட கரிப்புக் கும்மியிலும் இப்படியொரு சம்பவம் ஏதும் கிடையாது.

## முடிவுரை

**காலநிலை மாற்றத்தின் காரணமாக விவசாய உற்பத்தி குறைந்து உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டு சமூகத்தில் ஏற்றத்தாழ்வை அதிக்கின்றது. பெரும்தொற்று நோய்கள், பொது முடக்கம் காலத்தில் உணவு கிடைக்காமல் பல்லாயிரக்கணக்கான மக்கள் பட்டினி கிடந்தனர். அரசின் தவறான பொருளாதார கொள்கைகளால் விலைவாசி உயர்வு, உணவுத்தட்டுப்பாடு போன்ற நிகழ்வுகள் நமது அண்டை நாடான இலங்கையில் நடந்துள்ளது. நாடுகளுக்கிடையேயான போர், உள்நாட்டு முரண்கள் காரணமாகவும் செயற்கையான பஞ்சம் ஏற்படுத்தபடுகின்றது. இயற்கையின் கொடையாகிய ஆறுகளில் முல்லை பெரியாறு, காவிரி, பாலாறு ஆகியவற்றில் நதிநீர் பங்கீட்டு சிக்கல்கள் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் கடைமடை விவசாயிகள் பஞ்சத்தை எதிர்கொள்கின்றனர். பஞ்சம் ஒரு உலகளாவிய சிக்கலாக உருவெடுத்துள்ள இன்றைய சூழலில் தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்ட பஞ்சங்கள் குறித்தும் மக்கள் அவற்றை எதிர்கொண்ட விதம் குறித்தும் இக்கட்டுரையின் வாயிலாக அறிந்துகொள்ளலாம்.**

## References


Arnold, D. (1994) The Discovery of Malnutrition and Diet in Colonial India. *Indian Economic and Social History Review*, 31(1) 1–26. https://doi.org/10.1177/001946469403100101

Avvai Duraiswami Pillai, S. (1999) Pathitrupathu Moolamum Uraiyum, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India

Devereux, S. (2006) *The New Famines: Why Famines Persist in an Era of Globalization*. Routledge. P.32.

Digby, W. (1878) *The Famine Campaign in Southern India: Madras and Bombay Presidencies and province of Mysore, 1876-1878*, Vol1, Longmans, Green, And Co, London.

Digby, W. (1901) *Prosperous British India: A Revelation from Official Data*. T Fisher Unwin, London.

Dyson, T. (1991) On the Demography of South Asian Famines: Part II. *Population Studies*, 45(2), 279–297. https://doi.org/10.1029/2018GL081477

Gadgil, S. (2006) The Indian Monsoon, GDP and Agriculture. *Economic & Political Weekly*, 41, 4887-4895. http://www.jstor.org/stable/4418949

Lardinois, R. (2009) Famine, Epidemics and Mortality in South India: A Reappraisal of the Demographic Crisis of 1876–1878. *Economic and Political Weekly*, 20(11) 454–465. https://www.jstor.org/stable/4374179

Perumal, A.K. (1987) Tamil Kathai Padalkal, International Institute of Tamil Studies, Chennai, India

Puliyur Kesigan, (2010) Purananuru Moolamum Uraiyum, Saratha Pathipagam, Chennai, India

Samy, A.G.J. (2011) Impact of Economy on the Women of Tamil Nadu from 1600 to 1947 AD — A Missionary Perspective. *Proceedings of the Indian History Congress,* 72(1), 804-813. https://www.jstor.org/stable/i40173374

Sethuraman, C. (2017) Tamil Ilakiya Varalaru, New Century Book House, Chennai, India

Sivasubramanian, A. (1982) Thathu Varuda Panjamum Nattar Padalkalum, Semmalar, Madurai, India

Srinivasan, N. (1985) Arunachaleswarar methu vannamum Thathu varusathu Karipu kummiyum, Saraswathi Mahal Library, Thanjavur, India

Srinivasaraghaviyangar, S. (1893) *Memorandum on the Progress of the Madras Presidency During the Last Forty Years of British Administration*. Government Press, Chennai, India

World Meteorological Organization (WMO). (1986) Report on drought and countries affected by drought during 1974–1985. WMO, Geneva, 118.


## Conflict of interest

The Author’s has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License**

© The Author(s) 2025. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

K. Varusakkani, T. Dharmaraj, Records of Famines in Tamil Society and their impact, Indian Journal of Multilingual Research and Development, Vol 6, Iss 1, (2025) 22-33. DOI: https://doi.org/10.54392/ijmrd2514